# அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்தவர் கலைஞர்!

முதல்வர் உரை...! 3ஆம் பக்கத் தொடர்ச்சி

கலைஞரின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. ஏனென்றால், அவர்களே தமிழ்நாடு அரசு ஆவார். என் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசையே அவருக்கும் அவரது புகழுக்கும் நான் காணிக்கை ஆக்குகிறேன். இந்த நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி என்றால் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர் தொடாத துறையும் இல்லை – தொட்டுத் துலங்காத துறையும் இல்லை என்ற வகையில் அனைத்துத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

அவர் போட்டுக் கொடுத்த பாதையில்தான் அனைத்துத் துறைகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பொதுநலனும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அரசாங்கத்தை தலைவர் அவர்கள் நடத்தினார். அதனால்தான் ஐந்து முறை இந்த மாநிலத்தை ஆட்சி செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

**கலைஞர் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடுவோம்!**

விடுதலை இந்தியாவில் நடந்த 13 சட்டமன்றத் தேர்தலில் நின்று – வென்று காட்டிய வெற்றி வீரராக அவர் இருந்ததற்கு காரணம் மக்களோடு மக்களாக இருந்ததுதான். அவர் மக்களின் மனங்களில் என்றும் ஆட்சி செய்கிறார், இன்றும் வாழ்கிறார் கலைஞர். இலக்கியவாதிகளுக்கு எல்லாம் இலக்கியவாதியாக கவிஞர்களுக்கு எல்லாம் கவிஞராக அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் தலைவராக முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதல்வராகத் திகழ்ந்த தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அதுகுறித்த இலச்சினையை (லோகோ) வெளியிட்டு இருக்கிறோம்.

**கலைஞரின் சாதனைகளை விளக்கும் விழாக்கள்!**

கலைஞர் பெயரால் மாபெரும் நூலகம் மதுரையில் அமைய இருக்கிறது. சென்னையில் அவரது நூற்றாண்டு நினைவு மருத்துவமனை அமைய இருக்கிறது. அரசின் சார்பில் மாதம்தோறும் – மாவட்டம்தோறும் விழாக்களை நடத்த இருக்கிறோம். இவை புகழ்ப்பாடும் விழாக்களாக மட்டுமல்ல – கலைஞர் இந்த தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்த சாதனைகளை விளக்கும் விழாக்களாக இவை அமைய இருக்கின்றன. பயன்பெற்றோர் பங்கேற்கும் விழாக்களாக அது அமைய இருக்கின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகால தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் அடித்தளம் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொலைநோக்குப் பார்வையும் மிகச் சரியான திட்டமிடுதலும் மக்கள் மீது உண்மையான பற்றும் கொண்ட தலைவரால்தான் இப்படிச் செயல்பட முடியும் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

**கோடிக்கணக்கான மக்களின் நல்வாழ்வோடு தொடர்புடையவர்!**

கலைஞர் அவர்கள் உருவாக்கிய பள்ளிகள் – கல்லூரிகள் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் – நகரங்களின் மிகப்பெரிய வளர்ச்சியைத்தான் நாம் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அவரால் பள்ளிப்படிப்பை படித்தவர்கள் – கல்லூரிக் கல்வியைத் தொட்டவர்கள் – பொருளாதார விடுதலை அடைந்த மகளிர் – வேலைவாய்ப்பைப் பெற்ற அரசு ஊழியர்கள் – பணியாற்ற இடம் பெற்ற தொழிலாளர்கள் – இப்படி கோடிக்கணக்கான மக்களின் நல்வாழ்க்கையோடு தொடர்புடையவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

இன்றைய சென்னையிலும், சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் இந்த அளவுக்கு தொழில் நிறுவனங்கள் உதயமாகி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் கலைஞர் ஆட்சிக்காலம்தான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அதேபோன்ற தொழில் புரட்சியைத்தான் இன்று நமது திராவிட மாடல் அரசும் உருவாக்கி வருகிறது.

**கடந்த ஐம்பது ஆண்டுகால தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் அடித்தளம் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொலைநோக்குப் பார்வையும் மிகச் சரியான திட்டமிடுதலும் மக்கள் மீது உண்மையான பற்றும் கொண்ட தலைவரால்தான் இப்படிச் செயல்பட முடியும் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.**

கடந்த சில நாட்களுக்கு முன்னால் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளேன். 3233 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி இருக்கிறது.

**தமிழ்நாட்டில் தொழில் புரட்சி! கலைஞர் அமைத்த அடித்தளம்!**

வருகிற ஜனவரி மாதம் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த இருக்கிறோம். அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று சிங்கப்பூர், ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மீதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீதும் அவர்கள் வைத்திருக்கக்கூடிய மதிப்பையும் மரியாதையையும் அப்போது நான் அறிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் சிங்கப்பூர், ஜப்பான் தொழில் நிறுவனங்கள் அறிந்து வைத்திருக்கின்றன. "இந்தியாவில் முதலீடு செய்யும் போது நிச்சயமாக தமிழ்நாட்டில்தான் எங்களது நிறுவனங்களைத் தொடங்குவோம்" என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், தலைவர் கலைஞர் போட்டுக் கொடுத்த அடித்தளம் தான்.

**உலகெங்கும் வாழும் தமிழர்களின் தலைவர்; கலைஞர்!**

சிங்கப்பூர் மக்களிடத்திலே, தமிழர்களிடத்திலே நான் உரையாற்றும் போது தலைவர் கலைஞர் அவர்கள் பெயரைச் சொன்னாலே கைதட்டுகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல – உலகெங்கும் வாழக்கூடிய தமிழினத்தின் தலைவராக தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார் என்பதை அவர்கள் பெருமிதத்தோடு சொல்கிறார்கள். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடே கொண்டாட இருக்கிறது. உலகெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாட இருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாக்களை முன்னெடுக்க அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுநர்கள் கொண்ட குழுக்கள் விரைவில் அமைக்கப்படும். இரண்டொரு நாட்களில் அது வெளியிடப்படும். அந்தக் குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞருடைய பன்முக ஆற்றலை நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள், மக்கள் பணிகளைக் கொண்டாடும் விதமாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து இந்த ஆண்டு முழுவதும் தமிழ்நாடு முழுக்க மிகச் சிறப்பான வகையில் எழுச்சியோடு நடத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இவ்விழாவில் அறிவிக்கிறேன்.

**கலைஞர்; உலகத் தமிழர்களின் சொத்து!**

தலைவர் கலைஞர் என்பவர் தனிப்பட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சொத்து அல்ல; தமிழ்நாட்டின் சொத்து! உலகத் தமிழர்களின் சொத்து!

தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் கனவு இருந்தது உலகில் தலைசிறந்தவர்களாக தமிழர்கள் வலம் வர வேண்டும் என்று அவர் நினைத்தார். அதைப் போலவே, உலகத்தவர் அனைவரும் வலம் வரும் இடமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்ட வேண்டும் என்றும் நினைத்தார்.

**உலக நிறுவனங்களுக்கு – கலைஞர் திறந்து வைத்த வாசல்!**

இந்தியாவில் எந்த மாநிலமும் முன்னெடுக்காத போது, 1997ஆம் ஆண்டே 'டைடல் பார்க்'கை உருவாக்கி தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அந்தத் துறையில் தமிழ்நாடு மாபெரும் சாதனையை நிகழ்த்துவதற்கும் – உலக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கும் வாசலைத் திறந்து வைத்தது கலைஞர் உருவாக்கிய அந்த 'டைடல் பார்க்'தான்.

**சிங்கப்பூர் மக்களிடத்திலே, தமிழர்களிடத்திலே நான் உரையாற்றும் போது தலைவர் கலைஞர் அவர்கள் பெயரைச் சொன்னாலே கைதட்டுகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல – உலகெங்கும் வாழக்கூடிய தமிழினத்தின் தலைவராக தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார் என்பதை அவர்கள் பெருமிதத்தோடு சொல்கிறார்கள். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடே கொண்டாட இருக்கிறது. உலகெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாட இருக்கிறார்கள்.**

அந்த வகையில் – நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டி அவருக்கு, அவருடைய புகழுக்கு மேலும் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

**சிங்கப்பூர் – ஜப்பான் பயணத்தில் என்னுள் முகிழ்த்த எண்ணம்!**

தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும். உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தான "BEST IN CLASS" Convention Centerஆக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள், வர்த்தக மாநாடுகள், தொழில்நுட்பக் கூட்டங்கள், உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், உலகத் திரைப்பட விழாக்கள் போன்றவை நடக்கும் இடமாகக் 'கலைஞர் Convention Centre' அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

**கலைஞர் புகழை உலகெங்கும் எடுத்துச் செல்லும் அரங்கம்!**

மிகப்பெரிய Convention Centreகள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் – சென்னையில் இருக்கிறது, அதுவும் கலைஞர் பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும். Convention Centre போன்ற பயன்பாட்டுச் சின்னங்கள் கலைஞர் புகழை நூற்றாண்டுகள் கடந்தும் உலகமெங்கும் எடுத்துச் செல்லும்.

ஏற்கெனவே, தற்போது சென்னை நந்தம்பாக்கத்தில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக மையம் அமைந்திருந்தாலும், கூடுதலாக கட்டப்பட்டு வரும் வர்த்தக மையம் சுமார் 12 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் அது இருந்தாலும், இது வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அமையவுள்ள இந்த 'கலைஞர் Convention Centre' சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திரத் தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கி மிகப்பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை பெருமையோடும் – மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கலைஞர் convention centre' என்பது தமிழ்நாட்டு இளைய சக்தியை – அறிவு சக்தியை பூமிப்பந்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்வதாக அமையும்.

**இளைஞர்களின் அறிவுக் குடியிருப்பாக அமையும் அரங்கம்!**

'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று வரும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களுடைய, இளைஞர்களுடைய அறிவுக்குடியிருப்பாக 'கலைஞர் convention centre' அமையுமானால் காலமெல்லாம் கலைஞர் வாழ்வார்! அதுவே நம்மை ஆளாக்கிய தலைவருக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான, உண்மையான புகழாக இருக்கும்.

**கலைஞரின் முகம்தான் நமது இலச்சினை! கலைஞரின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்!**

கலைஞரின் கனவுகளை நிறைவேற்றுவதுதான் நமது வாழ்நாள் கடமை என்பதைச் சொல்லி முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து, வாழ்க, வாழ்க, வாழ்க என்றுரைத்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இலச்சினை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.5.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், "நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த விழாக்கள் அமைய வேண்டும்" என்றும், "மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும்" என்றும், "பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

மேலும், "அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக இவ்விழாக்கள் அமைய வேண்டும்" என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன் தினம் (2.6.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இப்புகைப்படக் கண்காட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், சாதனைகள், அவற்றால் மக்கள் பெற்ற பயன்கள், இளமைக் காலம் முதல் அவர் மேற்கொண்ட அரசியல் பயணம், பல்வேறு அரசியல் மற்றும் முக்கியத் தலைவர்களுடனான சந்திப்புகள் போன்றவை காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இப்புகைப்படக் கண்காட்சி ஜூன் மாதம் முழுவதும் மக்கள் பார்வையிட்டுப் பயன்பெறும் வகையில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மற்றும் அமைச்சர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், துறைச் செயலாளர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலுவின் மாமனார்

## கே.தசரதன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜுன் 4 –

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலுவின் மாமனார் கே.தசரதன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலு அவர்களின் மாமனாரும், காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவருமான கே.தசரதன் அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து வருந்தினேன்.

தசரதன் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

10ஆம் வகுப்பு புத்தகங்களில் 'ஜனநாயகம்' குறித்த பாடம் நீக்கம்!

## பா.ஜ.க. தனது அரசியல் கொள்கையை பாடத்திட்டத்தில் புகுத்துகிறது!

*புதுடெல்லி, ஜுன் 4-*

*தனிமங்களின் வரிசை அட்டவணை, அரசியல் கட்சிகள், ஜனநாயகம் உள்ளிட்டவை குறித்த பாடங்களை 10ம் வகுப்பு பாடத்திட்டத்தில் இருந்து ஒன்றிய அரசின் என்.சி.இ.ஆர்.டி நீக்கி இருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.*

*என். சி. இ. ஆர். டி எனப்படும் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கவுன்சில், பள்ளிக் கல்வி பாடப் புத்தகங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இந்த அமைப்பு தயாரிக்கும் பாட புத்தகங்களையே, சி.பி. எஸ்.இ., எனப்படும் மத்திய இடைநிலை கல்வி வாரியம் மற்றும் சில மாநில கல்வி வாரியங்கள் பயன்படுத்துகின்றன.*

*சமீபகாலமாக, பாடப் புத்தகங்களில் இருந்து பல்வேறு பகுதிகளை என்.சி.இ.ஆர்.டி வருகிறது. கொரோனா தொற்று நோய்க்குப் பிறகு மாணவர்களின் பாடச் சுமையை குறைக்கவும் மற்றும் புதிய தேசிய கல்விக் கொள்கை திட்டத்தின் கீழ்பாடங்களை குறைக்கவும்,*

*அனுபவ கற்றலுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலும் பாடத்திட்டங்கள் நீக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.*

*முன்னதாக, 12ஆம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகங்களில் இருந்து குஜராத் கலவரம், முகலாயப் பேரரசு தொடர்பான பகுதிகள், அரசியல் அறிவியல் பாடப் புத்தகத்தில் இருந்து மகாத்மா காந்தி மற்றும் கோட்சே தொடர்பான பகுதிகள் மற்றும் 6,7 மற்றும் 8ம் வகுப்பு பாடத்திட்டத்தில் இருந்து நெசவு மற்றும் கைத்தறி தொடர்பான பாடங்கள், 6ம் வகுப்பு வரலாற்று பாடத்தில் மகாத்மா காந்தி மற்றும் ராட்டை பற்றிய பகுதிகள், 9 மற்றும் 10ம் வகுப்பு அறிவியல் பாடத்தில் சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாடு தொடர்பான பகுதி ஆகியவை நீக்கப்பட்டன.*

*இது நாடு முழுவதும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படி பாடப்பகுதிகள் நீக்கப்படுவது பா.ஜ. தலைமையிலான ஒன்றிய அரசின் ஆட்சியில் தொடர் கதையாகி வருகிறது. இந்நிலையில், அடுத்த ஆண்டுக்கான திருத்தப்பட்ட என்.சி.இ.ஆர்.டி. பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ஏறக்குறைய 30% பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன. அனைத்து வகுப்புகளுக்கான பாடத்திட்டத்திலும் பாடங்களை நீக்குவதை என்.சி.இ.ஆர்.டி தற்போது வழக்கமாக கொண்டுள்ளது. அதில் 10ம் வகுப்பு அறிவியல் பாடத்திலிருந்து தனிமங்களின் வரிசை அட்டவணை நீக்கப்பட்டுள்ளது. சமூக அறிவியல்பாடப்புத்தகங்களில் இருந்து அரசியல் கட்சிகள், ஜனநாயகத்திற்கு உள்ள சவால்கள் போன்ற பாடப் பகுதியும் நீக்கப்பட்டுள்ளது. இது தற்போது பெரும் சர்ச்சையாகி உள்ளது. பா.ஜ.க. தனது அரசியல் கொள்கையை பாடத்திட்டத்தில் புகுத்துவதாக எதிர்க்கட்சிகள் இதனை விமர்சித்துள்ளன.*

நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதில்

## ஒன்றிய நீதித்துறை சோம்பேறித்தனம்!

### உயர்நீதி மன்ற கிளை நீதிபதிகள் கருத்தால் பரபரப்பு!

*மதுரை, ஜுன் 4-*

*இராமநாதபுரம் மாவட்டம், மோர்பண்ணையைச் சேர்ந்த வக்கீல் தீரன்திருமுருகன், உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், "ஒன்றிய அரசின் சார்பில் வன (பாதுகாப்பு) திருத்த மசோதா 2023 முன்மொழியப் பட்டுள்ளது.இதற்கான கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் இந்தி அல்லது ஆங்கிலத்தில் மட்டும் தெரிவிக்குமாறு ஒன்றிய வனத்துறை செயலர் மற்றும் நாடாளுமன்ற செயலக இணை செயலாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். ஆங்கிலம் மற்றும் இந்தி மொழி தெரியாதவர்கள் தங்களின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் தெரிவிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, திருத்த மசோதாவை தமிழ் மொழியில் வெளியிடுமாறும், கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை தமிழில் அனுப்ப அனுமதிக்குமாறும் உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.*

*இந்த மனுவை ஏற்கனவே விசாரித்த நீதிபதிகள், இந்தி மற்றும் ஆங் கிலத்தில் கருத்துக்கள் கேட்டு வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தர விட்டிருந்தனர். நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், விக்டோரியா கவுரி ஆகியோர்) முன், ஒன்றிய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல்சுந்தரேசன்வீடியோ கான்பரன்சிங்கில் ஆஜராகி,"நாடாளுமன்ற நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது. அரசின் மற்ற முன்னெடுப்புகள் பாதிக்காத வகையில் வனத்திருத்த மசோதா விற்கான கருத்துக்களை தமிழில் பெறுவதற்கு தயாராக உள்ளோம். எனவே, இடைக்காலத் தடையை நீக்கக் கோரும் ஒன்றிய அரசின் மனுவை உடனடியாக விசாரணைக்கு ஏற்க வேண்டும்" என்றார். அப்போது நீதிபதிகள் மசோதா தொடர்பான அறிவிப்பிற்கு விதிக்கப்பட்ட தடையை உடனடி யாக நீக்கக் கோர என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது?*

*பல வழக்குகளில் உயர்நீதிமன்றம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதை நிறைவேற்ற அவசரம் காட்டவில்லை. பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளன. குறிப்பாக மதுரை கடன் வசூல் தீர்ப்பாய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் காலியிடம் 2 ஆண்டுக்கு மேலாக நிரப்பப்படவில்லை. நீதிமன்றங்கள் எத்தனையோ உத்தரவுகள் பிறப்பித்துள்ளன. இன்னும் யாரையும் நியமிக்கவில்லை.*

*ஆனால், நீதிமன்ற தடையை மட்டும் உடனடியாக நீக்க வேண்டும் என்கிறீர்களே? ஏன் நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றவில்லை. நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதில் நிதியமைச்சகம் தோல்வி அடைந்துள்ளது.*

*இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.*